**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி வியாழக்கிழமை காலை10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 16.10.10 | 1) தூத்துக்குடி மாநகராட்சி ஜின் பாக்டரி ரோடு மேலப்பெரிய காட்டன் ரோடு பாலவிநாயகர் கோவில் தெரு ஆகிய மூன்று ரோடுகள் சந்திக்கும் இடத்தில் சர்வே வார்டு 4, பிளாக் 15 நகரளவு எண். 1402ல் உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி அடங்கல் கலம் 17ல் முனிசிபால்டி பம்பிங் செக்ஷன் எனவும், குறிப்பு கலம் 19ல் கோரம்பள்ளம் ரிசர்வயர், கலம் 18ல் பாலவிநாயகர் கோவில் தெரு என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடி பகுதி மக்களின் தேவைக்காக கோரம்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து குழாய் மூலம் குடிநீர் நீர்த்தேக்கம் செய்வதற்காக வட்ட தெப்பம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி வட்ட தெப்பம் நீர்த்தேக்கம் மற்றும் நீரேற்று நிலையம் தற்பொழுது சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயனற்ற நிலையில் இருந்து வருகிறது. மேற்கண்ட வட்ட தெப்பம் இடம் பயனற்ற நிலையில் காலியாக உள்ளதாலும் சமூக விரோத செயல்கள் நடைபெற்று வருவதாலும் பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. மேலும் மேற்கண்ட இடம் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் அந்த இடத்தில் மாநகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும் பொருட்டு வணிக வளாகம் கட்டுவதற்கு மாநகராட்சி பொறியாளர் குறிப்பு கொடுத்துள்ளார்.<br><br>எனவே மேற்படி இடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு ஏதுவாக நகரளவு ஆவணங்களில் ‘அ’ பதிவேட்டில் உள்ள கலம் 17ல் குறிப்பிட்டுள்ள முனிசிபாலிடி பம்பிங் செக்சன், கலம் 18ல் பாலவிநாயகர்கோவில் தெரு, குறிப்பு கலம் 19ல் உள்ள கோரம்பள்ளம் ரிசர்வயர், என குறிப்பிட்டுள்ள ஷரத்துக்களை நீக்கம் செய்து ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி என திருத்தம் செய்து பெயர் மாற்றம் செய்வதற்கு மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/14993/10 | 197) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி எட்டையாபுரம் ரோட்டில் நகரளவு வார்டு 4 பிளாக் 17 நகரளவு எண் 3328ல் பாளையங்கோட்டை ரோடு மற்றும் எட்டையாபுரம் ரோட்டில் இணைப்பு சாலையின் வடபுறத்தில் அமைந்துள்ள காலி இடம் உபயோகம் இல்லாத நிலையில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையில் தடுக்கவும், மாநகராட்சிக்கு வருமானம் அதிகரிக்கும் பொருட்டு வணிக வளாகம் கட்டுவதற்கு மாநகராட்சி நிர்வாக பொறியாளர் குறிப்பு கொடுத்துள்ளார்.<br><br>எனவே மேற்கண்ட இடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு ஏதுவாக நகரளவு ஆவணங்களில் முனிசிபல் கிணறு என உள்ளதை ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி என திருத்தம் செய்து பெயர் மாற்றம் செய்வதற்கு மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1. 15047/2010 | 198) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள இராஜாஜி பூங்கா நீர்த்தேக்க தொட்டியின் மூலம் நகரில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் மேற்படி இடத்தில் நீர்த்தேக்க தொட்டி உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினியான குளோரின் வாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி நீர்த்தேக்க தொட்டி நுழைவு வாயில் வழியாக பூங்காவிற்கு செல்லும் நுழைவு வாயில் உள்ளது. பூங்காவிற்கு செல்லும் நபர்கள் மற்றும் சமூக விரோதிகள் குடிநீர் விநியோக தொட்டி இருக்கும் இடத்தில் அத்துமீறி நுழைவது மற்றும் வாகனம் நிறுத்துவதால் பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோக பாதுகாப்பு கருதி பூங்காவின் கீழ் பக்கம் உள்ள கழிப்பறை கட்டி சுமார் 25 வருடத்திற்கும் மேல் ஆகிய நிலையில் பழுதடைந்து உள்ளதால் அதனையும் மற்றும் அதில் உள்ள மாநகராட்சி பணியாளர்களின் குடியிருப்பு கட்டி சுமார் 40 வருடங்களுக்கு மேல் ஆகி பழுதடைந்து குடியிருப்புக்கு உபயோகம் அல்லாத நிலையில் உள்ள காரணத்தால் 4 கதவு எண் கொண்ட குடியிருப்பு ஆகியவற்றை இடித்துவிட்டு பூங்காவிற்கு தனியாக ஒரு நுழைவு வாயில் அமைக்கவும் மற்றும் நீர் தேக்க தொட்டியின் மேல் புறம் இடிக்கப்பட்ட மாநகராட்சி பணியாளருக்கு புதியதாக குடியிருப்பு கட்டவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம் இ1/15056/2010 | 199) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| 4. | இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு எம். செல்வராஜ் என்பவர் தனது வயது முதிர்வின் காரணமாக 31–7–2010 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் அன்னாரது சிறப்பு சேமநல நிதி தொகையின் கணக்கினை முடித்து கீழ்க்கண்டவாறு தொகைகள் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை 2960/–<br>வட்டித் தொகை 11469/–<br>அரசு மான்யத் தொகை 10000/–<br>––––––––––––<br>மொத்தம் 24429/–<br>––––––––––––<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்<br><br>எச்1/14210/10 | 200) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 5. தமிழ்நாடு அரசு 2008–2009ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை கூட்டத்தொடரில் உள்ளாட்சித்துறை மானிய கோரிக்கைகளின் போது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. தூத்துக்குடி நகரத்துடன், சுற்றியுள்ள 10 கிராம ஊராட்சிகளை இணைத்து தூத்துக்குடி மாநகராட்சி உருவாக்க, தூத்துக்குடி நகரமன்ற தீர்மானம் எண். 441 நாள் 31.07.2008ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி அரசாணை எண்.137 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 29–07–2008ன்படி தூத்துக்குடி நகராட்சியை தரம் உயர்த்தி மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அரசாணை எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 17–03–2010ல் தூத்துக்குடி மாநகராட்சியுடன் 1) அய்யனடைப்பு 2) சங்கரப்பேரி 3) மாப்பிள்ளையூரணி 4) தூத்துக்குடி ரூரல் 5) முத்தையாபுரம் 6) முள்ளக்காடு 7) அத்திமரப்பட்டி 8) கோரம்பள்ளம் 9) மீளவிட்டான் 10) புதூர்பாண்டியாபுரம் ஆகிய 10 கிராம ஊராட்சிகளை இணைக்க அரசால் முடிவு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 133.10 சதுர கிலோ மீட்டராகவும் மக்கள் தொகை (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி ) 3,57,547 ஆகவும் ஆண்டு வருமானம் 2009–2010ல் ரூ. 50.99 கோடியாக உள்ளது.<br><br>தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகராட்சிகளான மதுரை மாநகராட்சி 51.85 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகவும், கோவை மாநகராட்சி 105.6 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகவும், சேலம் மாநகராட்சி 91.34 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகவும், திருநெல்வேலி மாநகராட்சி 108.65 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 146.90 ச.கி.மீ. கொண்டதாகவும் உள்ளது. ஆனால் உத்தேசிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாநகராட்சி பகுதி 133.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உள்ளது. மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள உள்ளாட்சிகள் தூத்துக்குடி மையப்பகுதியிலிருந்து அதிகபட்சமாக 12 கி.மீ. (முள்ளக்காடு) தொலைவு வரை அமைந்துள்ளது. உத்தேச மாநகராட்சியில் 1. அய்யனடைப்பு, 2) சங்கரப்பேரி, 3) மாப்பிள்ளையூரணி 4) தூத்துக்குடி ரூரல் 5) முத்தையாபுரம் 6) முள்ளக்காடு 7) அத்திமரப்பட்டி 8) கோரம்பள்ளம் 9) மீளவிட்டான் ஆகிய ஊராட்சிகள் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்திலும் புதூர் பாண்டியாபுரம் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திலும் மேற்கண்ட ஊராட்சிகள் தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.<br><br>கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை 10 என்பது மிகவும் அதிகமாக உள்ளது. மிகப்பெரிய அளவில் கிராம ஊராட்சிகளை மாநகராட்சியுடன் இணைப்பதால் கிராம பகுதிகளுக்கு கிடைக்கப்பெறும் மத்திய , மாநில அரசின் நிதியுதவி ஆதாரங்கள் அப்பகுதிகளுக்கு கிடைக்காமல் போகவும், முக்கிய தொழிலான விவசாய வளர்ச்சிக்குரிய திட்டங்கள் செயல்படுத்த இயலாமல் போகவும் , கலைஞர் வீட்டு வசதி திட்டம் போன்ற ஏழை மக்களுக்கான பல திட்டங்கள் கிடைக்காமல் போகவும் நேரிடும். மேலும், நகர்ப்புற பகுதிகளுககு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் இந்த கிராம ஊராட்சிகளில் தற்போது ஏற்படுத்த வேண்டிய தேவையில்லை. மற்றும் அதற்கு தேவையான நிதி ஆதாரம் மாநகராட்சியில் இல்லை. மாநகராட்சியுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சில ஊராட்சிகள் நகர்ப்புறமாக வளர்ச்சியடையாமல் கிராமப் பகுதியாகவே உள்ளது. மேலும், பெரும்பாலான .ஊராட்சிகள் தூத்துக்குடி நகரிலிருந்து நீண்ட தொலைவில் அமைந்துள்ளன. எனவே, ஊராட்சி பகுதிகளை தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைப்பதை மறு பரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | 201) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அங்கீகரிக்க ப்பட்டது |

நகர்புற மாறுதலுக்கான பல்வேறு குறியீடுகள் (மக்கள் தொகை அடர்த்தி, தனி நபர் வருமானம், உள்ளாட்சியின் மொத்த வருமானம் / சதுர கிலோ மீட்டர், பிரதான விவசாயிகளின் சதவிகிதம்) போன்றவற்றையும், மாநகராட்சியின் மைய அலுவலகத்திலிருந்து உள்ளாட்சி அமைப்புகளின் தூரம் போன்ற குறியீடுகளையும் ஆய்வு செய்ததில் தற்போது தூத்துக்குடி மாநகராட்சிக்கு அருகில் நகர்ப்புறமாக வளர்ச்சியடைந்துள்ள தூத்துக்குடி ரூரல், மீளவிட்டான், முத்தையாபுரம், சங்கரப்பேரி, அத்திமரப்பட்டி, ஆகிய 5 கிராம ஊராட்சிகளை இணைத்து தூத்துக்குடி மாநகராட்சி எல்லையை விரிவுபடுத்துவது சிறந்தது என கருதி இப்பகுதிகளை மட்டும் தற்போதைய தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கலாம் என தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 5 உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், தூத்துக்குடி மாநகராட்சி எல்லை 90.663 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகவும், 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மொத்த மக்கள் தொகை 320466 ஆகவும், மொத்த ஆண்டு வருவாய் (2009–2010ம் நிதியாண்டு கணக்கீட்டின் படி) ரூ. 49.87 கோடி கொண்டதாகவும் அமையப் பெறும்.

மாநகராட்சியின் தற்போது உத்தேசித்துள்ள விரிவாக்கம் நிர்வாகத்திற்கு ஏற்புடையதாகவும் , மாநகராட்சியின் மையப் பகுதியிலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அனைத்து பகுதிகளும் அமையும் வகையில் உள்ளதாலும், மாநகரில் செயல்படுத்தப்படும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலை வசதி, குடிநீர், பாதாளச் சாக்கடைத்திட்டம் போன்ற அனைத்து திட்டங்களும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்து செயல்படுத்த ஏற்புடையதாகவும் இருப்பதால் மாநகராட்சி உத்தேச எல்லை வரையரை அமல்படுத்த ஏதுவாக இருக்கும்.

இணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளாட்சிகளின் அடிப்படை அளவீடுகள் கீழ்க்கண்டவாறு அமையப்பெற்றுள்ளது.

| வ.எண். | உள்ளாட்சிகளின் பெயர் | பரப்பளவு (ச.கி.மீ.) | மக்கள் தொகை (2001 கணக்கீட்டின் படி) | இடைக்கால மக்கள் தொகை(2009–2010) | ஆண்டு வருமானம் (ரூ. (2009–10) இலட்சத்தில்) | 1 ச.கி.மீ. வருமானம் (ரூ.லட்சத்தில்) | தனி நபர் ஆண்டு வருமானம் | மக்கள் தொகை அடர்த்தி (2001) | மக்கள் தொகை அடர்த்தி (2010) | பிரதான விவசாயம் செய்பவர்கள் (சதவீதம்) Main cultivators | தற்போது மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து உள்ளாட்சிகள் அமைந்துள்ள தூரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சி | 13.47 | 216054 | 231040 | 4639.97 | 344.466 | 2032 | 16040 | 17152 | 0.3 | ––– |
| 2 | சங்கரப்பேரி | 12.036 | 11551 | 17239 | 43.871 | 3.645 | 254 | 960 | 1322 | 8.02 | 2 |
| 3 | தூத்துக்குடி ரூரல் | 1.285 | 11523 | 16713 | 24.482 | 19.05 | 146 | 8967 | 13006 | 2.56 | 5 |
| 4 | மீளவிட்டான் | 32.005 | 30758 | 49331 | 101.227 | 3.162 | 205 | 961 | 1541 | 1.37 | 3 |
| 5 | முத்தையா புரம் | 25.984 | 31813 | 37185 | 125.76 | 4.839 | 338 | 1224 | 1431 | 0.47 | 9 |
| 6 | அத்திமரப் பட்டி | 5.883 | 18767 | 24841 | 52.66 | 8.951 | 212 | 3190 | 4222 | 1.35 | 11 |
| | மொத்தம் | 90.663 | 320466 | 376349 | 4987.97 | | | | | | |

தற்போது சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள 5 உள்ளாட்சிப் பகுதிகளிலும் ஆண்டு வருவாய், தனி நபர் ஆண்டு வருவாய், மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, பிரதான விவசாயிகள்

| | | |
|---|---|---|
| | தற்போது சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள 5 உள்ளாட்சிப் பகுதிகளிலும் ஆண்டு வருவாய், தனி நபர் ஆண்டு வருவாய், மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, பிரதான விவசாயிகள் ஆகிய அளவீடுகள் நகர்ப்புற வளர்ச்சித் தன்மைக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது.<br><br>மேற்கண்ட 5 உள்ளாட்சிகளை மட்டும் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைப்பதால் நகர்ப்புற பகுதியாக வளர்ச்சியடைந்துள்ள இப்பகுதிகளில் ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி சிறப்பாக செயல்படுத்த வழிவகை உள்ளது. மேலும் கிராமப் பகுதிகளுக்கு கிடைக்கப் பெறும் அரசின் நிதி உதவிகள், திட்டங்கள் தொடர்ந்து அப்பகுதிகளுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.<br><br>எனவே அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.3.2010ல் அரசால் முடிவு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ள 10 உள்ளாட்சி அமைப்புகளில் மேலே குறிப்பிட்டுள்ள 5 உள்ளாட்சி அமைப்புகளை மட்டும் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கவும் மற்ற 5 உள்ளாட்சி அமைப்புகளை தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைப்பதிலிருந்து நீக்கம் செய்யவும் வேண்டி, உத்தேச மாமன்ற எல்லை விரிவாக்கத் திட்டம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** 1) தூத்துக்குடி மாமன்ற தீர்மான எண் 441 நாள் 31–7–2008ன் படி தீர்மானித்த உள்ளாட்சி அமைப்புகளை மாற்றியமைத்து மன்றப் பொருளில் உள்ள 5 உள்ளாட்சிகளை (தூத்துக்குடி ரூரல், மீளவிட்டான், முத்தையாபுரம், சங்கரப்பேரி, அத்திமரப்பட்டி) மட்டும் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைத்து தற்போது உத்தேசித்துள்ள மாமன்ற எல்லை விரிவாக்கத் திட்டத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>2) 5 உள்ளாட்சிகள் தவிர பிற உள்ளாட்சிகளை தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கும் முன்மொழிவினை கைவிட்டு அரசாணை (நிலை) எண். 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17–3–2010க்கு உரிய திருத்தம் செய்திட அரசினை கோர மாமன்றம் தீர்மானிக்கலாம்.<br><br>3) மேற்கண்ட முடிவு குறித்து அரசுக்கு உரிய கருத்துரு அனுப்பவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>எப்1/21218 /2005 | |
| 6 | இம்மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட வடிகால் திட்ட உபவிதிகளுக்கு தூத்துக்குடி மாமன்ற தீர்மானம் எண். 101, நாள் 29–05–2009இல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி வடிகால் திட்ட உபவிதிகளை தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிட அறிவிக்கை கட்டணமாக ரூ 70265/–ஐ (ரூபாய் எழுபதாயிரத்து இருநூற்று அறுபத்தைந்து) எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை அவர்களுக்கு வங்கி வரைவோலை அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/11512/2007–எல் | 202)<br>அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது. |